மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDARM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

Double-Blind Peer-Reviewed | Open Access

E-ISSN: 3049-3676 (ONLINE)

Bimonthly | Online Publication | Tamil Language

Published: 23.10.2026

Volume 10 | Issue 10 | September – October 2026

The Scheme and Downfall of Surpanakha

Dr. M. Tamilvanan

Junior Research Officer
Central Institute of Classical Tamil
Chennai - 600 100

Abstract

Two major turning points in the Ramayana, one of India's great epics, are brought about by two women. The first turning point is caused by Manthara (the hunchback), and the second by the demoness Surpanakha. This article focuses exclusively on examining and elucidating the machinations and downfall of Surpanakha, the figure responsible for the second turning point.

Keywords: Surpanakha's beauty, Surpanakha as a schemer, the origin of enmity between Rama and Ravana, Surpanakha's infatuation with Rama, Ravana's rage, Surpanakha settling a long-standing grudge.

சூர்ப்பணகையின் சூழ்ச்சியும் வீழ்ச்சியும்

முனைவர் ம. தமிழ்வாணன்
இளநிலை ஆராய்ச்சி அலுவலர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை - 600100

ஆய்வுச் சுருக்கம்

இந்திய இதிகாசத்தில் ஒன்றான இராமாயணத்தில் ஏற்படும் மாபெரும் இரு திருப்பங்களும் இரு மகளிர்களாலேயே உருவாகின்றன. அதன் முதல் திருப்பம், மந்தரை என்னும் கூனியாலும், இரண்டாம் திருப்பம் சூர்ப்பணகை என்னும் அரக்கியாலும் ஏற்படுகின்றன. இவற்றுள் இரண்டாம் திருப்பத்திற்குக் காரணமான சூர்ப்பணகையின் சூழ்ச்சியும் வீழ்ச்சியும் பற்றி மட்டும் இக்கட்டுரை ஆராய்ந்து விவரிக்கின்றது.

திறவுச்சொற்கள்: சூர்ப்பணகையின் அழகு, சூர்ப்பணகை ஒரு சூத்திரகாரி, இராமன் இராவணனுக்குப் பகை உண்டாதல். சூர்ப்பணகை இராமன் மீது கொண்ட காதல், இராவணன் சினம் கொள்ளுதல், சூர்ப்பணகை நெடுநாள் பகையைத் தீர்த்தல்

முன்னுரை

இராமாயணக் கதையைத் தமிழர்கள் சங்க காலத்திலேயே அறிந்திருந்தனர். இதற்குச் சான்றாகப் புறநானூற்றின் 378 ஆம் பாடலையும், அகநானூற்றின் 70ஆம் பாடலையும் குறிப்பிடலாம். கம்பர்,

வால்மீகியின் இராமாயணக் கதையைத் தழுவித் தமிழ் மரபிற்கேற்ற சுமார் 22,000 பாடல்களில் எழுதி இராமகாதை என்று பெயரிட்டார். இக்கதையில் சித்திரிக்கப்பட்ட நிகழ்வுகள் தமிழ்மக்களின் மரபுவழி வாழ்வியலில் நீங்கா இடம் பெற்றுள்ளது. இத்தாக்கத்தால் அவர்களின் ஊர்ப்பெயர்கள், இறை வடிவங்கள், காணும் இயற்கை வடிவங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது.

இப்பெருமைமிகு இராமாயணத்தில் இடம்பெறும் ஒரு முக்கிய பாத்திரம் சூர்ப்பணகை. இவள் அரக்கர் குலத்தைச் சேர்ந்த இலங்கை அரசன் இராவணனின் தங்கை ஆவாள். இவளது ஏனைய சகோதரர்கள் கும்பகர்ணன், வீடணன், சுபாகு, கரன் ஆவர். இராமன், சீதை, இலட்சுமணன் ஆகியோர் காட்டில் வாழ்ந்து வந்தபோது சூர்ப்பணகை இராமன் மீது ஆசை கொண்டாள். இலட்சுமணன் அவளது மார்பகங்களையும், மூக்கையும் வெட்டித் துரத்திவிட்டான். இதனால் கோபமடைந்த அவள் தனது அண்ணனிடம் முறையிட்டாள். தனது தங்கைக்கு நேர்ந்த நிலையையிட்டுச் சினம் கொண்ட இராவணன் இராமனைப் பழிவாங்க எண்ணிச் சீதையைக் கவர்ந்து கொண்டு வந்து இலங்கையின் அசோகவனத்தில் சிறை வைத்தான். இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது சூர்ப்பணகை என்னும் பாத்திரமாகும். இப்பாத்திரத்தின் சூழ்ச்சியும் வீழ்ச்சியும் பற்றிக் காண்போம்.

சூர்ப்பணகையின் அழகு

இந்திய இதிகாசங்கள் இரண்டுமே மகளிரைக் காரணமாய், காரண கர்த்தாக்களாய்க் கொண்டே தோன்றியுள்ளன. இராம சரிதம் என்னும் காவியக் கதையிலும் மாபெரும் இரு திருப்பங்கள் இரு மகளிராலேயே

ஏற்படுபவையாக உள்ளன. முதல் திருப்பம், மந்தரை என்னும் கூனியாலும், இரண்டாம் திருப்பம் சூர்ப்பணகை என்னும் அரக்கியாலும் ஏற்படுகின்றன. சூர்ப்பணகை ஒரு அழகான மங்கை என்பது பல இடங்களில் மறைக்கப்படுகிற ஒரு நிகழ்வு. பொதுவாக அவள் அழகில்லாத பெண்ணாகவே சித்திரிக்கப்படுகிறாள். கம்பராமாயணத்தில், காதுகளையும், மூக்கையும், முலையையும் அரியும் இலட்சுமணன், மூலக்கதையான வால்மீகியில் காதுகளையும் மூக்கையும் மட்டுமே அரிகிறான். அவள் எத்தகைய அழகு மங்கை என்பதை கம்பன், இராமன் வாயிலாகவே வெளிப்படுத்துகிறார். பிறக்கும்போதே அவள் தன் தாய் கைகேசி மற்றும் பாட்டி தாடகை ஆகியவர்களையும் அழகில் விஞ்சியிருந்தாள். அவள் கண்களின் அழகை முன்னிட்டு மீனாட்சி என்றும் அழைக்கப்பட்டாள். அவளை,

"செங் கயல்போல் கரு நெடுங் கண், தே மரு தாமரை உறையும்
நங்கை இவர் என நெருநல் நடந்தவரோ நாம்? என்ன",[1]

என்னும் பாடலில் 'சிவந்த கயல் மீன் போன்று பிறழும் கரிய நீண்ட கண்கள் கொண்டவள். தேன் ஊறும் தாமரை வசம் செய்யும் திருமகள் இலட்சுமி இவளே' என்று இராமன் சொல்வதாக நயம்பட கம்பர் சுட்டுகிறார்.

மேலும், சூர்ப்பணகையின் நடையழகைப் பற்றிக் கூறும் கம்பன்,

"பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடியள் ஆகி
அஞ்சொல் இள மங்கைஎன அன்னம் என மின்னும்
வஞ்சி என நஞ்சம் என வஞ்ச மகள் வந்தாள்" [2]

என்று பாடியுள்ளார். ஓசை நயத்தை விளக்க இதைவிட வேறுபாடலைக் காட்டவியலாது. அவளுடைய பாதம் பஞ்சு போன்று மென்மையானதாம். எந்த அளவுக்கு மென்மையானது என்றால் கொடியின் தளிர் அவள் பாதத்தைப் பார்த்தால் வருத்தப்படுமாம். ஏன்? அடடா, இவள் பாதம் இவ்வளவு மென்மையாகவும் பளிச்சென்றும் ஒளி வீசுவதாகவும் இருக்கிறதே. நாம் அப்படி மென்மையாகவும் பளிச்சென்றும் இல்லையே என்று தளிர்கள் வருந்துமாம். அத்தனை மென்மையான பளிச்சென்ற பாதங்களை உடையவள் சூர்ப்பணகை. இதனை எத்தனை முறை பாடினாலும் அலுப்புத் தட்டாது. அவள் இத்தகைய நடையழகைப் பெற்றவளாக இருந்தாள்.

சூர்ப்பணகை ஒரு சூத்திரகாரி

அறிவுள்ள அரக்கியாக, சூழ்ச்சிக்கென உதித்த சூனியக்காரியாக, நல்லோர் குடி கெடுக்க வந்த நயவஞ்சகியாக, காமுகியாக, எல்லோராலும் தூற்றப்படும் விதமான ஒரு பாத்திரமாக சூர்ப்பணகையின் பாத்திரம் இராம காதையில் இடம் பெற்றிருந்த போதும் வாசிப்போர் அப்படியொரு எதிர்மறை எண்ணம் எள்ளளவும் ஏற்படாதிருக்கும் வண்ணம் சூர்ப்பணகையைத் திட்டமிட்டுச் செயலாற்றும் வினைத்திட்பமுடையாளாய், சுவை கனிய உரையாடும் நயப்பாடும், வாதப் போர் வன்மையும், சொல் திறமும், நடிப்பு நலமும், நினைத்ததை நினைத்த வண்ணம் முடிக்கும் மனத்தின்மையும் வாய்ந்தவளாக உருவாக்கி, செம்மையுறச் செறிவாக்கி, இராம காதையில் மாபெரும் இரண்டாம் திருப்பத்தைச் செயலாக்கியிருக்கும் கம்பர் கவிநயம் எல்லோர் உள்ளங்களுக்கும் ஏகமாய் உவப்பளிக்குமொன்றாகும்.

சூர்ப்பணகை ஒரு அரக்கி. ஆனால் பிரமன் மரபில் தோன்றியவள். இராவணன் மற்றும் கும்பகர்ணனுக்குப் பின்னும் விபீடணனுக்கு முன்னும் பிறந்தவள். இராவணன் அவளை காலகேயருள் ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்திருந்தான். பின்னாளில் இராவணன் காலகேயேரைப் போரிட்டு அழிக்கையில் அவள் கணவனும் மாண்டுவிட, இராவணன் தண்டகாரண்யத்தில் ஒரு தனி இராச்சியத்தை அவளுக்கென அமைத்து அவள் விரும்பிய வண்ணம் வாழ வைக்கிறான்.

இராவணன் திசைப் பயணத்தின் போது பல போர்களைச் செய்தான். அப்போர்களில் குறிப்பிடத்தக்கது காலகேயர்களுடன் நிகழ்த்திய போர். ஏனெனில் அப்போரில் காலகேயருடன் இணைந்து தன்னை எதிர்த்துப் போர் செய்த தன்னுடைய மைத்துனனும், தன்னுடைய தங்கை சூர்ப்பணகையின் கணவனுமாகிய வித்துருசிங்கனையும் இராவணன் கொன்றான்.

> **“தன்னுடைய தங்கையாஞ் சலமிகுத்த சூர்ப்பணகை**
> **தன்னைக் கொண்ட**
> **மின்னனைய சுடரிலைவேல் வித்துருசிங்**
> **கன்றனைவெங் களத்து வீழ்ந்தான்.”** [3]

என்னும் பாடல் தொடர்களில் இராவணன் தன் மைத்துனனைக் கொன்ற செய்தி கூறப்படுவது காணலாம். தன் கணவன் தன் அண்ணனாலேயே கொல்லப்பட்டதைக் கண்ணுற்ற சூர்ப்பணகை பெருந்துன்பம் உற்றாள்.

"என் கணவனைக் கொன்று, நான் மங்கல அணியினை இழக்குமாறு செய்த என் தமையன், மூவுலகையும் புகழுடன் ஆள, அதைப் பார்த்துக் கொண்டு நான் வாழமாட்டேன்; என் தமையனைக்

கொன்று விட்டு நானும் இறப்பேன்" என்று என்று போர்க்களத்தில் இறந்து கிடந்த தன் கணவன் முன்னிலையில் உறுதிகொண்டாள்.

“முன்னமே தானென்னை முறைமையா லேகொடுத்துப்
பின்னெனைநூ லிழப்பித்த விராவணனா மென்றமையன்
றன்னைமூ வுலகாள யான்கண்டு தாரவுணர்
மன்னனே யுடல்சுமந்து வாழ்வேனோ வாழ்வேனோ” [4]

“தாக்கியே காதலனைத் தரைப்படுத்த தசமுகனார்
நாக்கினைநான் பிடுங்கியென்ற னடலை நோ யதுதீரப்
போக்குவெனென் னுயிரென்று சூர்ப்பணகை புறப்பட்டாள்.” [5]

இராவணனைக் கொல்ல வேண்டும் என்பது சூர்ப்பணகையின் உறுதியான முடிவாயிற்று. எப்படிக் கொல்வது? அதற்காக அவள் செய்த சூழ்ச்சியே சீதையின் மீது இராவணனுக்குக் காதல் உண்டாகுமாறு செய்தது.

இராமபிரான் மீது சூர்ப்பணகை காதல் கொண்டதாகவும், சீதை இராமனுடன் இருக்கும்வரை இராமன் தன்னை விரும்பமாட்டான் என்று கருதியதாகவும், சீதையை இராமனிடம் இருந்து பிரிப்பதற்காகவே இராவணன் உள்ளத்தில் சீதையின் மீது காதல் எழச்செய்ததாகவும் சொல்லப்படுகின்றது. உண்மைதான். ஆனால், சூர்ப்பணகையின் செயல்களைச் சிந்தித்துப் பார்த்தால், சூர்ப்பணகைக்கு இராமன் மீது காதல் கொள்வதைவிட, இராமனுக்கும், இராவணனுக்கும் இடையே பகைமை ஏற்படுத்த வேண்டும் என்பதே முதன்மையான நோக்கமாக இருந்திருக்கின்றது.

இராமன் மீது காதல் கொள்வதுதான் முதன்மையான நோக்கம்

என்றால், அவள் நினைத்தவாறு சூழ்ச்சி செய்து இராமனிடம் இருந்து சீதையைப் பிரித்த பின்னர் இராமனைச் சந்திக்க முயன்றிருக்க வேண்டும். இராவணன் தான் சாகும்வரை சீதையின் மீது கொண்ட காதலை விட முடியாமல் தவித்தது போல, சூர்ப்பணகையும் இராமனைத்தேடி அலைந்து தவித்திருக்க வேண்டும். ஆனால், அவள் அவ்வாறு செய்யவில்லை.

இராவணன் சீதையைக் கவர்ந்து கொண்டு வந்து அசோக வனத்தில் சிறை வைத்தபின் அவள் தன் நோக்கம் நிறைவேறியவளைப் போல அமைதி அடைகின்றாள். எனவே, இராமனுக்கும், இராவணனுக்கும் பகைமை உண்டாக்க வேண்டும் என்பதுதான் அவளுடைய நோக்கமாக இருந்திருக்கின்றது.

இராமன் மீது காதல் கொள்ளுதல் அவளுடைய தலைமையான நோக்கம் அன்று என்பது தெளிவாகின்றது. இராவணனால் கொல்லப்பட்ட தன் அன்புக் கணவன் வித்துருசிங்கன் உடல் மீது விழுந்து புலம்பியபோது கூறிய உறுதிமொழியின் படி, இராவணனைக் கொல்வதற்குச் சீதையை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கின்றாள் என்றுதான் கருதத் தோன்றுகிறது. இராவணன் இறந்த பின்பு, புலம்புகின்ற வீடணன் கூற்றும் நம்மை இவ்வாறு நினைக்க வைக்கின்றது.

> **“கொல்லாத மைத்துனனைக் கொன்றாய் என்று அது கேட்டுக்**
> **கொடுமை சூழ்ந்து பல்லாலே இதழ் அதுக்கும் கொடும்பாவி**
> **நெடும்பாரப் பழி தீர்ந்தாளே”** [6]

என்பன வீடணன் கூற்றைச் சுமக்கும் வரிகள். மைத்துனனை எவரும் கொல்லமாட்டார்கள். ஆனால் நீ கொன்றாய். அதைக் கேட்டுத் தன் பல்லினால் உதட்டை மடித்துக் கடித்துக் கொண்டு, கொடிய பாவியாகிய சூர்ப்பணகை தன்னுடைய நெடுநாள் பகையைத் தீர்த்துக் கொண்டாளே என்பது இதன் பொருள்.

இராமன் இராவணனுக்குப் பகை உண்டாதல்

இராமருக்கும், சீதைக்கும் காதல் என்பது கம்பராமாயணத்தில் மட்டுமே காணக் கிடைக்கும் ஒரு காட்சி. வால்மீகி எந்த இடத்திலும் இருவரும் காதல் கொண்டதாய்ச் சொல்லவே இல்லை. எனினும் திருமணத்திற்குப் பின்னர் இருவரும் அன்புடனும், ஆனந்தத்துடனும் வாழ்ந்து வந்ததாகவே சொல்கின்றார். ஆனால் கம்பரோ இருவரும் இராமன் மிதிலைக்குள் நுழைந்ததுமே சீதையைப் பார்ப்பதாகவும், கன்னிமாடத்தில் இருக்கும் சீதையும், இராமரைக் காண்பதாகவும், மிக அழகாய் காதலர்களின் நோக்கை இவ்வாறு வருணிக்கின்றார்.

> **“எண்ண அரு நலத்தினாள் இனையள் நின்று வழி**
> **கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று**
> **உண்ணவும், நிலை பெறாது உணர்வும் ஒன்றிட,**
> **அண்ணலும் நோக்கினான்: அவளும் நோக்கினாள்.”** [7]

என்று இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டபோது இருவரின் கண்கள் மட்டுமில்லாமல், உணர்வும் ஒன்றுபட்டது என்று சொல்லுகின்றார். காதலின் சிறப்பை இதை விடச் சிறப்பாகச் சொல்லவும் முடியுமோ! வால்மீகியை முழுதும் உள்வாங்கிக் கொண்டே கம்பர் இந்தக் காவியத்தை வடித்திருந்தாலும், அவரின்

சொல்லாற்றலால் வால்மீகியைவிடச் சிறந்து விளங்குகின்றார் என்றே சொல்லலாம்.

சூர்ப்பணகை இராமர் பால் கொண்ட காதல்

சூர்ப்பணகை இராமர் பால் கொண்ட காதல் சூழ்ச்சியால் கதைக்கு மெருகேற்றம் செய்துள்ளார் கம்பர். இதைக் காதல் என்று சொல்ல முடியாது. ஏற்கெனவே திருமணம் ஆனவளே சூர்ப்பணகை. ஒரு மகனும் இருக்கின்றான். ஆனால் அவனைத் தற்செயலாக இலட்சுமணன் தர்ப்பைப் புல் அறுக்கும்போது சந்திக்க நேருகின்றது. இது தெரிந்தோ, அல்லது தெரியாமலேயோ வருகின்றாள் சூர்ப்பணகை. அங்கு வந்ததுமே இராமரின் வடிவைக் கண்டு அதிசயித்துப் போவதோடு, சீதையைக் கண்டும் பொறாமை கொள்கின்றாள். இராமரை எவ்வாறேனும் அடைந்தே தீருவது என்றும் எண்ணுகின்றாள். சகோதரர் இருவரும், சூர்ப்பணகையின் இந்த நடவடிக்கையைக் கண்டு முதலில் பரிகாசமாய்ச் சிரித்தாலும், பின்னர் சீதையை அவள் கொல்ல முயல்வது கண்டு சூர்ப்பணகை தண்டிக்கப் படுகின்றாள். உடல் அங்கங்களான மூக்கும் மார்பும் அறுப்புற, உறுப்புக்கள் சிதைவுற, குருதியருவி கொட்ட இராவணனைத் தேடி வந்து கதறுகிறாள். உடனேயே சூர்ப்பணகையின் காதல், அல்லது காமவெறி பழிவாங்குதலில் முடிகின்றது.

இலங்கைக்கு வடக்கிலுள்ள தண்டக வனத்தில் சின்னா பின்னப்பட்டுச்
சூர்ப்பணகை வருதலால் வடதிசை வாயிலில் புகுந்து வருதல் கூறினார்.

“தோன்றலும், தொல் நகர்அரக்கர் தோகையர்

ஏன்று எதிர், வயிறு அலைத்து, இரங்கி ஏங்கினார்;

மூன்று உலகு உடையவன் தங்கை மூக்கு இலள்,

தான் தனியவள் வர, தரிக்க வல்லரோ?” [8]

இவ்வாறு சூர்ப்பணகை வந்து காட்சி தந்ததும் பழமையான இலங்கை நகரின் அசுர குலப் பெண்கள் எதிர்கொண்டு அவளெதிரில் வயிற்றில் அடித்துக் கொண்டுவருந்தி அழுதனர் மூவுலகங்களுக்கும் தலைவனான இராவணன் தங்கைமூக்கு இழந்தவளாய் தான் துணையின்றி வரபொறுக்க இயல்பவராய் ஆவரோ? இருந்தனர். இன்னிசை முழங்கிய நகரில் அமங்கல அழுகை ஒலி கேட்கலாயிற்று.

இராவணன் சினம் கொள்ளுதல்

சூர்ப்பணகையின் நிலை கண்டு சினமுற்ற இராவணன், “உன்னை இது செய்தார் யாவர்,” என்று வினவினான்.

“கானிடை அடைந்து புவி காவல் புரிகின்றார்;

மீனுடை நெடுங் கொடியினோன் அனையர்; மேல் கீழ்

ஊனுடை உடம்பு உடைமையோர் உவமை இல்லா

மானிடர்; தடிந்தனர்கள் வாள் உருவி' என்றாள்.” [9]

“புவியாளும் அரச மரபினர், விண்ணிலும் மண்ணிலும் உள்ளவர்கள் எவருக்குமே ஒப்பாகாதவர்களாகிய மனிதர்கள், காட்டில் வந்து வாளை உருவி என் உறுப்புக்களை அறுத்து விட்டார்கள்” இராவணனோ அதை நம்ப மறுக்கிறான், “மானிடர் வலிமையற்றோர், ஆகவே உன் கூற்று நம்பத் தகாதது” என்று கூறி இராவணன் மீண்டும் சூர்ப்பணகையை வினவுகிறான்,

“செய்தனர்கள் மானிடர்' என, திசை அனைத்தும்

எய்த, நகை வந்தது; எரி சிந்தின, கண் எல்லாம்;

'நொய்து அவர் வலித் தொழில்; நுவன்ற மொழி ஒன்றோ?

பொய் தவிர்; பயத்தை ஒழி; புக்க புகல்' என்றான்.” [10]

இக்காட்சியில் கம்பர், இராம இலக்குமணரின் புற அழகை, அக ஒழுக்கத்தை, மதி நுட்பத்தை, புகழின் உச்சத்தை, சூர்ப்பணகையின் வாயுரையாக்கி அப்பாத்திரத்தினை வானுயர உயர்த்துகின்றார்.

“மாரர் உளரே இருவர், ஓர் உலகில் வாழ்வார்?

வீரர் உளரே, அவரின் வில் அதனின் வல்லார்?

ஆர் ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள், ஐயா?

ஓர் ஒருவரே இறைவர் மூவரையும் ஒப்பார்.” [11]

“அவர் வடிவழகினால் மன்மதனைப் போன்றவர். தோள் வலிமையால் மேரு மலையின் வன்மையை அழிக்கக் கூடியவர். தங்கள் வில் ஆற்றலால் ஓர் இமைப் பொழுதில் ஏழு உலகங்களில் உள்ளவர்களின் வலிமையையும் அழிக்கத் தக்கவர். முனிவர்களிடம் வணக்கமுடையவர். சந்திரனைப் போன்ற முகமுடையவர். மணம் பொருந்திய தாமரை மலர் போன்ற கண்களையும், பாதங்களையும், கைகளையும் உடையவர். நீண்ட வீரக் கழல் அணிந்தவர். மார்பில் அணிந்த முப்புரி நூலினர். வில் வித்தையில் வல்லவர். வேதம் தங்கிய நாவினர். தளிர் போன்ற மேனியினர். உனக்குச் சிறிதும் அஞ்சாதவர். உன்னை ஒரு துகளுக்கு ஒப்பாகவும் மதியாதவர். சொற்களின் வடிவமாக உள்ள கலைகளைப் போல் அழியாத அம்பறாத் தூணிகளைச் சுமந்திருப்பவர்.”

“அடங்கிய புலன்களையும் உயர் ஒழுக்கத்தையும் உடைய முனிவர்கள் சென்று “அரக்கருக்கு அஞ்சுகின்றோம்” என்று முறையிட “எல்லா உலகங்களையும் வென்று விடுவோம்” என்று கூறிக் கொள்ளும் உங்கள் குலம் முழுவதையும் அடியோடு அழியும்படி உங்களைக் கொல்வோம் என்று முன்பு செய்து கொண்ட ஒரு சபதத்தை உடையவர்.”

“ஓர் உலகில் வாழும் இரு மன்மதர்கள் உளரோ? வில் வித்தையில் அவர்களினும் வல்லவரானவர் எவரேனும் உளரோ? அவருக்கு ஒப்பாவார் ஒருவரும் இலர். அவ்விருவருள் ஒவ்வொருவருமே மும்மூர்த்திகளுக்கு ஒப்பாவார்.”

“புவி முழுவதும் தன் ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி ஆட்சி புரிந்தவனான தசரதன் என்னும் அரசனுடைய மைந்தர். பழி இல்லாதவர். தந்தை சொல்லை ஏற்றுக் காட்டில் வந்து வசிக்கின்றனர். இராமன் என்றும் இலக்குவன் என்றும் பெயர் கூறப்படுவர்” என்று கூறி முடித்தாள்.

சூர்ப்பணகை நெடுநாள் பகையைத் தீர்த்தல்

இதில் சூர்ப்பணகை இராவணன் மீது கொண்ட பகை, நெடுநாள் இருந்த பகை; பெரும் சுமையாக இருந்த பகை. இராம-இராவண யுத்தத்தால் இராவணன் இறந்தவுடன் சூர்ப்பணகையின் உள்ளத்தில் இருந்த அந்த சுமை இறங்கிவிட்டது. வீடணன் கூற்றில் உள்ள நெடும்பாரப் பகை என்னும் தொடர் இதை உணர்த்துவதைக் காண்கின்றோம்.

முடிவுரை

சூர்ப்பணகை மிகவும் அன்பானவளாய், மென்மையானவளாய் இருப்பினும் சகோதர உருவத்தில் விதி அவள் மகிழ்ச்சியான வாழ்க்கையைப் புறட்டிப்போட்டு விட்டது. அவளுடைய சூழல் அவளைத் தீவிர எதிர்நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டது. அவள் நினைத்தவாறே இராமனின் வாயிலாக இராவண வதம் நிறைவேறியது. அதன் பிறகு இராவணன் ஆட்சிப் புரிந்த இலங்கையில் இருக்க விருப்பமின்றிப் போனது. அதனால் சூர்ப்பணகை, இராம இலட்சுமணரை வணங்கி விடைபெற்றுக் கண்காணாத இடத்திற்குச் சென்று, தன் இறுதிக் காலத்தை நிறைவு செய்தாள்.

மேற்கூறியவாறு கம்பர், தன் காப்பியத்தில் எதிர்மறைப் பாத்திரங்களையெல்லாம் தன் கவித்திறத்தால், கற்பனை நயத்தால், உரைச் செறிவால் உயர்த்திக் காட்டியிருக்கிறார். கவியின் பயன், களிப்பு. களிப்பாவது குறைவற்ற உள்ள நிறைவு. ஆரவாரமற்ற மன அமைதி. உணர்ச்சி வெள்ளத்தைப் பெருக்கி, ஆரவாரப் புயலை எழுப்பி அமைதியைக் குலைக்கும் ஏனையோர் கவிகளைப் போலல்லாது, மாபெருங் கவிஞராகிய கம்பர் கவி கற்போர்க்கு அந்நிறைவை, அமைதியை ஆயுள் முழுதுக்குமாய்த் தரவல்லது. ஒரு மனிதன் தான் தொடர்ச்சியாகத் தோல்விகளைச் சந்திக்கும்போது மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அதைவிடவும், தொடர்ச்சியாக வெற்றிகளைச் சந்திக்கும்போது அதிகக் கவனமாக மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இது ஒரு வாழ்வியல் உண்மை.

இராவணனுடைய வீழ்ச்சியும், இராவணனுடைய வீழ்ச்சி பற்றிய வீடணனுடைய கூற்றும் இவ்வுண்மையை உணர்த்துகின்றன.

அடிக்குறிப்புகள்

1. கம்பராமாயணம், ஆரணிய காண்டம்:117
2. கம்பராமாயணம், சூர்ப்பணகைப் படலம் 31
3. இராமாயணம், உத்தர காண்டம் 411:3-4
4. இராமாயணம், உத்தர காண்டம் 428
5. இராமாயணம், உத்தர காண்டம் 432:2-4
6. கம்பராமாயணம், யுத்த காண்டம், மண்டோதரி புலம்புறு படலம் 9:1-2
7. கம்பராமாயணம், பால காண்டம், மிதிலைக் காட்சிப் படலம் 35
8. கம்பராமாயணம், ஆரணிய காண்டம், சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் 26
9. கம்பராமாயணம், ஆரணிய காண்டம், சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் 50
10. கம்பராமாயணம், ஆரணிய காண்டம், சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் 51
11. கம்பராமாயணம், ஆரணிய காண்டம், சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் 55

துணை நூற்பட்டியல்

1. வேங்கடராமச் செட்டியார், செ., (உரையாசிரியர்), இராமாயணம், ஒட்டகூத்தர் இயற்றிய உத்தர காண்டம் (முதல் தொகுதி), (1977), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்
2. பதிப்பாசிரியர் குழு, கம்பராமாயணம் - இராமாவதாரம், (1976) கம்பன் கழகம், சென்னை
3. சுப்பராய செட்டியார், சோடசாவதானம் (உரையாசிரியர்), ஶ்ரீமத் கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம் மூலமும் உரையும், (1904), ஶ்ரீலட்சுமிநாராயணவிலாச அச்சுக்கூடம்: மதராஸ்
4. மாணிக்கம், வ.சுப., கம்பர், (மறு.1994), மணிவாசகர் பதிப்பகம், சென்னை
5. சுப்பிரமணியன், ச.வே., கம்பன் கற்பனை, (1978), தமிழ்ப் பதிப்பகம், அடையாறு